

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டு அட்டை பயனாளிகள் பதிவு செய்தல் முகாம் தாம்பரம் மாநகராட்சி அனகாபுத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமை குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முகமை துவக்கி வைத்து மகப்பேறு தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துபெட்டகங்களை வழங்கினார். அப்பொழுது இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத், மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர்கள் வே. கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, சுகாதாரக் குழு தலைவர் இரா.நரேஷ் கண்ணா, பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்



இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் மண்டலம், ஸ்டீபன்சன் சாலையில் ரூ.66.83 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளை நேற்று (24.06.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், மத்திய வட்டார துணை ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமைப் பொறியாளர் எஸ்.இராஜேந்திரன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன் ஆகியோர் உள்பட பலர் உடனிருந்தனர்.

### “பாசிச - எதேச்சதிகார அரசு வீழ்த்தப்பட்டது; மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட்டது!”

# இச்செய்தியை உலகிற்குச் சொல்வதாக பாட்னா பயணம் அமைந்துள்ளது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜூன் 25 -

இந்தியாவில் பாசிச - எதேச்சதிகார அரசு வீழ்த்தப் பட்டது; மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட்டது என்ற நல்ல செய்தியை உலகிற் குச் சொல்வதாக பாட்னா பயணம் அமைய வேண் டும் என ‘தீக்கதிர்’ நாளேடு 24.6.2023 தேதியிட்ட இதழில் “பா.ஜ.க.வின் வயிற்றெரிச்சல்” என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.




அது வருமாறு:-

அடுத்தாண்டு மக்களை வைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி, மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு எதிரான கட்சி களை ஒருங்கிணைத்து, கூட்டணி அமைக்கும் முயற்சிகளை பல்வேறு கட் சிகளின் தலைவர்கள் மேற்கொண்டுள்ளனர். அந்த வகையில், பீகார் மாநில முதல்வரும் ஐக்கிய ஜனதாதள கட்சியின் தலை வருமான நிதிஷ்குமார், பல் வேறு மாநிலங்களின் முதல்வர்கள், தேசியக் கட்சி களின் தலைவர்களைச் சந் தித்து, புதிய ஒருங்கிணைப் புக்கான ஆதரவைக் கோரினார்.

இதையடுத்து பீகார் தலைநகர் பாட்னாவில் வெள்ளியன்று நடைபெற்ற மதச்சார்பற்ற கட்சிகளின் கூட்டத்தில் காங்கிரஸ், சி.பி. எம்., தி.மு.க., தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதள எம், ஆம்ஆத்மி, மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட 17 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். எதிர்க்கட்சி கள் ஒன்று சேரமாட்டார்கள். அவர்களுக்குள் ஒற்றுமை கிடையாது என்று நக்கல் அடித்துக்கொண்டிருந்த பா.ஜ.க. தலைவர்கள் பாட் னாவில் எதிர்க்கட்சித் தலை வர்களின் அணிவகுப்பைப் பார்த்துக் கதி கலங்கிப் போயிருப்பது அவர்கள் புலம்புவதைப் பார்த்தாலே தெரிகிறது.

“எதிர்க்கட்சிகளின் ஒற் றுமை சந்தர்ப்பவாத அரசி யல்” என்று பா.ஜ.க. தேசி யத் தலைவர் ஜெ.பி.நட்டா தனது வயிற்றெரிச்சலை கொட்டியுள்ளார். அமலாக் கத்துறையை ஏவி அரசியல் கட்சிகளை தன் வசப்படுத்த அலைந்து கொண்டிருக்கும் ஒரு கட்சியின் தலைவர் இப் படிப் பேசுவதை யாரும் தீவி ரமாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். “புகைப்படக் காட்சிக் காக அவர்கள் ஒன் றுகூடி இருக்கிறார்கள். எவ் வளவு முயன்றாலும் அவர் களால் ஒன்றிணைய முடியாது” என்று உள் துறை அமைச்சர் அமித்ஷா சாபம் விட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் ஒன்றி ணைந்தால் நம்பாடு திண் டாட்டம் என்பதை பா.ஜ.க. தலைவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். எனவே தான் எதிர்க் கட்சிகளின் ஒற் றுமையைச் சீர்குலைக்க அக்கட்சிகள் ஆட்சியில் இருக்கும் மாநிலங்களில் வருமான வரி, சி.பி.ஐ., அம லாக்கத்துறையை ஏவி விட்டு மிரட்டிப் பணிய வைக்க முயல்கி றார்கள்.

தமிழகத்திலும் இத்த கைய மிரட்டல் அரசியலை ஒன்றிய அரசு முயன்று தோற்றுப்போயிருக்கிறது. அ.தி.மு.க., பகுஜன் சமாஜ் போன்ற ஊழல் கட்சிகளை பா.ஜ.க. மிரட்டலாம். பா.ஜ.க.வை சித்தாந்த ரீதி யில் எதிர்த்தால் தான் இந்தி யாவுக்கு எதிர்காலம் இருக் கிறது என்று கருதும் எந்த ஒரு கட்சியையும் மிரட்டிப் பணிய வைக்கமுடியாது.

இனி நாம் ஒன்றுபட்டால் தான் இந்தியாவையும் இந் திய மக்களையும் காப்பாற்ற முடியும் என்பதை உணர்ந் துள்ள எதிர்க்கட்சிகள் வரும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வை மண்ணைக் கவ்வச்செய்ய வைப்பது உறுதி. எனவே பாட்னா வில் தொடங்கியுள்ள ஒற் றுமை பயணம் அடுத் தாண்டு மே மாதம் மதச்சார்பற்ற சக்திகளின் அரசு மத்தியில் அமையும் வரை ஓயக்கூடாது.

இந்தியாவில் பாசிச எதேச்சதிகார அரசு வீழ்த்தப் பட்டது; மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட்டது என்ற நல்ல செய்தியை உலகிற் குச் சொல்வதாக இந்தப் பய ணம் அமைய வேண்டும்.

இவ்வாறு அத்தலையங் கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

---

### அண்ணாநகர் தெற்குப் பகுதி 106 வது வட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சமபந்தி விருந்து!

## நே.சிற்றரசு - தயாநிதிமாறன் - எம்.கே.மோகன்- ந.இராமலிங்கம் துவக்கி வைக்கின்றனர்

சென்னை, ஜூன் 25-

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்கு பகுதி 106வது வட்ட தி.மு.க. சார்பில் முத்த மிழ றிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சமபந்தி விருந்து இன்று (25.6.2023) மதியம் 12 மணிக்கு முத்துமாரி யம் மன் கோயில் அருகில் வட் டச் செயலாளர் ப.மகேஷ் ராஜா தலைமையில் நடை பெறுகிறது.

ஏ.கே. மூர்த்தி, எஸ். பி.குமார், ஆர்.எஸ்.கில் பர்ட், பானுமதி கிருஷ்ண சாமி, ஜீவகன் அய்யநாதன், வட்டச் செயலாளர்கள் ந. அதியமான், இரா. பொன் னுரங்கம், இரா, நவீந்திரகு மார், தெ.கருணாநிதி, வி. எம். சிவா, ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர்.

எம்.எஸ்.கே.காசிம், ஆர். அன்பில் பாபு, எம்.எஸ். சோமசுந்தரம், கு.ரவி, கோ.காமராஜ், ஆ.செல்வ ராஜ், வி.வெங்கடேசன், கே.முகமதுஅலி ஆகியோர் வரவேற்கின்றனர்.

சமபந்தி விருந்தினை மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம். கே.மோகன் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் - சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், தகவல் தொழில்நுட்பஅணி மாநில துணை அமைப்பாளர் எம். கார்த்திக் மோகன், டாக் டர் நா. சந்திரபாபு, ஏ.டி. முருகன், கராத்தே ஆனந் தன், இராணி ரவிச்சந்திரன் , து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ.அகஸ்டீன்பாபு, ஐ.கென்னடி வழக்கறிஞர் வி.நன்மாறன். எஸ்.ராம்கு மார், வழக்கறிஞர் ஆனந்த குமார், ஆர்.நடராஜன், ந. அன்பு, பி.துரை, வி.தட்சி ணாமூர்த்தி, மா.நித்தியா னந்தம், சி.கே.கிருஷ்ண மூர்த்தி, ஏ.டி.ஏ. யூனிஸ்மை தீன், ,எ.வ.பாலகிருஷ்ணன், து.செல்வக்குமார்சொலி முரளி ஜெயகுமாரன், பி.பச் சையப்பன், ஜி. சத்தியகு மார், கே.மலர், தாராவீரன், எம்.இளையராஜா, எம். பிரபு மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர் கள். துணை அமைப்பாளர் கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

வெ.சண்முகம், மு.ப.சங் கர், கு. அமலக்கனி ஆகி யோர் நன்றி கூறுகின்றனர்.




SASTHA GRAPHICS

29-ஆம் ஆண்டு நினைவு நாள்

முத்தமிழறிஞர் கலைஞரின் முன்னாள் ஆசிரியர்

திருவாரூர் க.சாம்பசிவம்

13.06.1911 - 26.06.1994

மகன்கள்

நங்கநல்லூர் எஸ்.வாஞ்சிநாதன் BA.,BL., வழக்கறிஞர்

கே.எஸ்.தியாகராஜன் B.Com.,

எஸ்.செந்தில் M.Com.,


---

### கலைஞர் நூற்றாண்டு விழா

# 105-வது வட்டத்தில் நல உதவிகள்!

## தயாநிதி மாறன் – நே.சிற்றரசு – எம்.கே.மோகன் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 25-

அண்ணா நகர் தெற்கு பகுதி 105-வது வட்டத்தில் தலைவர் கலைஞர் நூற் றாண்டு விழா, நலத்திட்ட உதவிகள் மற்றும் 1000 பேருக்கு அறுசுவை பிரி யாணி வழங்குதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பகுதி பிரதிநிதி ஜி.சங்கர் தலைமையில், வட்டக் கழ கச் செயலாளர் மாமன்ற உறுப்பினர் ந.அதியமான் முன்னிலை வகிக்கின்றார்.

தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் , பகுதிச் செயலா ளர் ந.இராமலிங்கம் மற்றும் மாநில தகவல் தொழில் நுட்ப அணியின் துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் நலத் திட்ட உதவிகள் வழங்கு கின்றனர்.

வட்ட செயலாளர்கள் இரா .பொன்னுரங்கம், இரா. நவீந்திரகுமார் ப. மகேஷ்ராஜா, தெ.கருணா நிதி, வி.எம்.சிவா, பகுதி நிர் வாகிகள் எஸ்.பி.குமார். ஆர்.எஸ். கில்பர்ட், வி.நன் மாறன், அரும் கோ.முரளி, ந.அன்பு, ஜி.சத்தியகுமார், ஏ.ரமேஷ், எஸ்.மாறன், அஜோஸ்மேரி, கே தங்க வேல், கே.ஆர் சண்முகம், வி.சி.சிவக்குமார், யமஹா பிரகாஷ், சு.இளவழகன், என்.ஆர்.செந்தில்குமார், மாநில, மாவட்ட கழக நிர் வாகிகள் மற்றும் அணிக ளின் நிர்வாகிகள் அனைவ ரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட கழ கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

### நீலகிரி மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில்

# கழக வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி!

## பா.மு.முபாரக்கிடம் வாழ்த்துப் பெற்றனர்!

உதகை, ஜூன் 25-

நீலகிரி மாவட்ட திட்டக் குழு தேர்தலில் தி.மு.க. சார் பில் போட்டியிட்ட வேட் பாளர்கள் ரவிகுமார், முஸ்தபா, ஜார்ஜ், ராம சாமி, ராஜேந்திரன், பாபு, விசாலாட்சி ஆகியோரும், ஏற்கனவே மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களாக உள்ள பொன்தோஸ், உமா ராஜன், வனஜா, மீனா, சசி கலா, அனீபா ஆகியோர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக வெற்றி பெற்றதை தொடர்ந்து மாவட்ட தி.மு.க. அலுவல கமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்த மிழ் அறிஞர் கலைஞர் ஆகி யோர் திருவுருவ சிலைக ளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக்கிடம் வாழ்த் துப் பெற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் நாசர் அலி, மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளரும், மாவட்ட ஊராட்சி தலைவ ருமான பொன்தோஸ், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா, உதகை தெற்கு ஒன் றிய செயலாளர் பரமசிவன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத் துல்லா, தொரை, பில்லன், உதகை நகராட்சி தலைவர் வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன், மாவட்ட பிரதிநிதிகள் கார்த்திக், இஸ் மாயில், மணிகண்டன், உதகை நகர மன்ற உறுப்பி னர்கள் ரவி, ரீட்டாமேரி, ரமேஷ், ரகுபதி, விஷ்ணு, கஜேந்திரன், நாகமணி, கீதா, மேரி பிளோரினா, பிரியா வினோதினி, திவ்யா, அனிதா லட்சுமி, பிளோ ரினா, மீனா, ஜாகீர்உசேன், மன்சூர், கோபி, சாந்தாசந் திரன், வசந்தி, சுசிலா, சித்ரா, பாக்கியவதி, சமீனா மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்ட னர்.

---

### கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் இளைஞரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

## வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு.



கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட டங்கள் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர் களின் அறிவிப்பு வருமாறு

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மற்றும் இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பகுதிகளில் தொடர் பொதுக்கூட்டங் கள் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ளது.

அதுசமயம் சம்பந்தப்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும். மேலும், அந்தந்த பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டங்கள் மற்றும் தெருமுனைப் பிரச்சார கூட்டங்க ளில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மாந கர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், ஒன்றியக் குழுத் தலைவர்கள் மாவட்ட, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூ ராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோ டிகள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பில்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு,**

**பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும் விவரம்**

| நாள் | இடம் | சிறப்பு பேச்சாளர் |
|---|---|---|
| 1) 28.06.23 புதன்கிழமை | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் குறிஞ்சிப்பாடி பேரூர் | திண்டுக்கல் **ஐ.லியோனி** கொள்கை பரப்புச் செயலாளர் தலைவர், தமிழ்நாடு பாடல் நூல் கழகம். |
| 2) 01.07.23 சனிக்கிழமை | கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி**, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 3 02.07.23 ஞாயிற்றுக்கிழமை | சிதம்பரம் நகரம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி** Ex.Mla, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 4,) 03.07.23 திங்கள்கிழமை | கடலூர் வடக்கு ஒன்றியம் | **நெல்லிக்குப்பம் புகழேந்தி**. Ex.Mla, கொள்கை பரப்பு இணைச் செயலாளர் |
| 5) 03.07.23 திங்கள்கிழமை | புவனகிரி கிழக்கு ஒன்றியம் | **ச.அ.பெருநெற்கிள்ளி** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 6)04.07.23 செவ்வாய்கிழமை | குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் | **ச.அ.பெருநெற்கிள்ளி** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 7) 05.07.23 புதன்கிழமை | கடலூர் மாநகரம் | **சைதை சாதிக்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 8)06.07.23 வியாழக்கிழமை | பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் | **சைதை சாதிக்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 9)07.07.23 வெள்ளிக்கிழமை | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் | **குடியாத்தம் குமரன்** கொள்கை பரப்பு துணைச் செயலாளர் |
| 10)08.07.23 சனிக்கிழமை | புவனகிரி மேற்கு ஒன்றியம் | **குடியாத்தம் குமரன்**, கொள்கை பரப்பு துணைச் செயலாளர். |
| 11)10.07.23 திங்கள்கிழமை | குமராட்சி கிழக்கு ஒன்றியம் குமராட்சி மத்திய ஒன்றியம் | **புதுக்கோட்டை விஜயா**. மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 12)10.07.23 திங்கள்கிழமை | வடலூர் நகரம் | முனைவர் **கோவி.செழியன்,** வர்த்தகர் அணி துணைத் தலைவர் அரசு கொறடா |
| 13)10.07.23 திங்கள்கிழமை | கடலூர் தெற்கு ஒன்றியம் | **தூத்துக்குடி சரத்பாலா** தலைமைக் கழக பேச்சாளர் |
| 14) 11.07.23 செவ்வாய்கிழமை | காட்டுமன்னார்கோவில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம், காட்டு மன்னார்கோவில் பேரூர் | **புதுக்கோட்டை விஜயா.** மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 15) 11.07.23 செவ்வாய்கிழமை | திருமுட்டம் வடக்கு ஒன்றியம் | **தூத்துக்குடி சரத்பாலா** தலைமைக் கழக பேச்சாளர் |
| 16) 13.07.23 வியாழக்கிழமை | குமராட்சி வடக்கு ஒன்றியம் குமராட்சி தெற்கு ஒன்றியம் குமராட்சி மேற்கு ஒன்றியம் | முனைவர் **கோவி.செழியன்**, வர்த்தகர் அணி துணைத் தலைவர்,அரசு கொறடா |
| 17) 13.07.23 வியாழக்கிழமை | பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் | **கந்திலி கரிகாலன்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 18)13.07.23 வியாழக்கிழமை | திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் | **ஈரோடு. இறைவன்,** கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் |
| 19) 14.07.23 வெள்ளிக்கிழமை | திருமுட்டம் மேற்கு ஒன்றியம் | **ஈரோடு.இறைவன்**, கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் |
| 20) 14.07.23 வெள்ளிக்கிழமை | கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் | **கந்திலி கரிகாலன்** தலைமைக் கழக பேச்சாளர் |
| 21) 15.07.23 சனிக்கிழமை | கடலூர் கிழக்கு ஒன்றியம் கடலூர் மேற்கு ஒன்றியம் | **புதுக்கோட்டை விஜயா.** மகளிரணி பிரச்சார செயலாளர் |
| 22) 16.07.23 ஞாயிற்றுக்கிழமை | கடலூர் மாநகரம் | **கரூர். முரளி** தலைமைக் கழக பேச்சாளர் |
| 23) 17.07.23 திங்கள்கிழமை | கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் கெங்கைகொண்டான் பேரூர் | **கரூர். முரளி** தலைமைக் கழக பேச்சாளர் |

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**

(வேளாண்மை - உழவர் நலத்துறை),

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,

செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.